# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# கறம்பக்குடி - 622 302

---

## <u>பத்திரிகைச் செய்தி</u>

**<u>29.11.2023</u>**

• 30.11.2023 • Trichy • Dinakaran

புதுக்கோட்டை

மருதன்கோன் விடுதி அரசு கலைக்கல்லூரியில்

## ரூ.2.12 கோடியில் பிற்படுத்தபட்டோர் நல மாணவர் விடுதி: முதல்வர் காணொலியில் திறப்பு

### அமைச்சர் மெய்யநாதன் குத்து விளக்கேற்றினார்



கறம்பக்குடி அருகே மருதன்கோன்விடுதி அரசு கலை கல்லூரியில் பிற்படுத்த பட்டோர் நல மாணவர் விடுதியை காணொளி காட்சி மூலம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். விடுதி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் குத்து விளக்கேற்றினார்.

கறம்பக்குடி, நவ.30: புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே மருதன்கோன்விடுதி கிராமத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

இக்கல்லூரியில் பிற்படுத்த பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களின் கல்வி நலன் கருதி தமிழக அரசு சார்பில் ரூ.2 கோடியே 12 லட்சம் மதிப்பில் பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல துறை சார்பில் மாணவர் விடுதி கட்டிடம் கட்டப்பட்டு பணிகள் நடைபெற்று முடிவடைந்தது. இதையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை காணொலி காட்சி வாயிலாக பிற்படுத்த பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர் விடுதியை திறந்து வைத்தார்.

100 மாணவர்கள் தங்கும் வகையில் அமைக்கப்பட்ட முதல்வரால் திறந்து வைக்க பட்ட மருதன்கோன் விடுதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர் விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்று துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி இனிப்புகளை வழங்கி பேசுகையில், தமிழ்நாடு நாட்டிற்கே முன் மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இவ்விடுதியில் 100 மாணவர்கள் தங்கும் வகையிலும் உணவு அருந்தும் விடுதி காப்பாளர் அறை, சமையல் அறை, கழிவறை உள்ளிட்ட வசதிகளுடன் தரை தளத்துடன் கூடிய கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளது என்றார். பின்னர் மாணவர் விடுதி வளாகத்தில் பசுமை திட்டத்தின் நோக்கத்தில் மர கன்றுகளை அமைச்சர் நட்டு வைத்தார் மேலும் அதிக அளவில் மரக் கன்றுகளை நடவும் உத்தரவிட்டார்.

விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம் அப்துல்லா, கந்தர்வக்கோட்டை எம்எல்ஏ சின்னதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட பிற்படுத்த பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, வெள்ளாளவிடுதி ஊராட்சி மன்ற தலைவர் பரமசிவம், அட்மா கமிட்டி தலைவர் முத்து கிருஷ்ணன், உதவி பொறியாளர் பாஸ்கர், விடுதி காப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் கல்லூரி முதல்வர், அலுவலர்கள், மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

# கறம்பக்குடி - 622 302




**<u>YouTube link</u>**

https://youtu.be/6ERk_llC2xs?si=xk_cw1chNb1z3_xG